Koviloor Digital Library

திருமுறைகளுக்குத் தடையா ?



11571
Q23

கே.சி. லட்சுமிநாராயணன்

Koviloor Digital Library

Koviloor Digital Library 5-5

திருமுறைகளுக்குத் தடையா?

போலி ஆத்திகர், போலி நாத்திகர்
கூட்டணியை ஒதுக்குக!

ஆசிரியர்:

கே.சி. லட்சுமிநாராயணன்
(மூத்த பத்திரிகையாளர்)

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 11571
Q 23

வெளியிடுபவர்:

கே.சி. லட்சுமிநாராயணன்
1076, 19–வது மெயின் ரோடு
அண்ணா நகர் மேற்கு
சென்னை – 600 040
தொலைபேசி : 26183704

Koviloor Digital Library

முதற்பதிப்பு : செப்டம்பர், 2007

விலை : ரூ.20/-

ஆசிரியரின் அனைத்து நூல்களும் கிடைக்குமிடம் :

எல்கேஎம் பப்ளிகேஷன்
பழைய எண் 15/4, புது எண்.33/4,
ராமநாதன் தெரு,
தியாகராய நகர்,
சென்னை - 600 017
தொலைபேசி : 24361141

Printed by : LKM Computer Printers, Chennai - 17
Phone : 9940682929

Koviloor Digital Library

5 - 5

திருமுறைகளுக்குத் தடையா?

பத்து உண்மைகள்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கம் முதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய், மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்

– திருவிளையாடற் புராணம்

முதலில் ஒரு செய்தி - பிறப்பு, மரபு, நம்பிக்கை, வாழ்க்கை முறை ஆகியவற்றால் நான் ஒரு சைவன்; சைவ நெறியைப் பின்பற்றி வாழ முயல்பவன்.

திருநீறும், உருத்திராட்சமும், நமசிவாய என்ற திருவைந்தெழுத்தும் என்னை மலங்களிலிருந்து விடுவித்து, இறைவன் திருவடிகளை அடைவிக்கும் என்று நான் உளமார நம்புகின்றேன்.

மணிவாசகப் பெருமான் அருளியுள்ள சிவ புராணத்தை நான் தினசரி ஓதுகின்றேன். பாராயணமாக மட்டுமின்றி, நடைப்பயிற்சி, பயணம் போன்ற சமயங்களிலும் சிவபுராணத்தை நான் சிந்தையில் கொள்கின்றேன்.

Koviloor Digital Library

நான் இந்து சமயத்தின் பிற நெறிகளைத் துவேஷிப்பவன் அல்லன்; வைணவம் முதலிய பிற நெறிகளைப் போற்றியே அமைபவன்; நான் கிறித்துவம், இஸ்லாம் போன்ற பிற மதங்களை வெறுப்பவனும் அல்லன்; அவற்றுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் மதிப்பும், மரியாதையும் அளிப்பவன். **எனது நெறி சைவ நெறி என்பதே என் கொள்கை.**

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் விரும்பத் தகாத சில போக்குகளையும், சில நிகழ்ச்சிகளையும் கண்டு நான் வருத்தம் அடைந்திருக்கிறேன். அண்மைக் காலமாக நிலவரம் முன்னிலும் மோசமாகி உள்ளது. ஒரு சைவன் என்ற முறையில் எனது கருத்துகளையும், சில உண்மைகளையும் பதிவு செய்து பொதுமக்களுக்குக் — குறிப்பாகச் சைவப் பெருமக்களுக்கு — அறிவிக்க வேண்டிய தருணம் இப்போது வந்துவிட்டது என்று நான் கருதுகிறேன்.

போலி நாத்திகம்

தமிழகத்திற்கு ஒரு சாபக்கேடு. கடந்த எண்பது ஆண்டுகளாகப் போலி நாத்திகம் தமிழ்நாட்டில் உலா வந்துகொண்டிருக்கிறது.

அறிவியல் அடிப்படையில் கடவுள் இல்லை என்று கூறும் உண்மையான நாத்திகர்களை நான் பெரிதும் மதிப்பேன்; அவர்களது அறிவியல் நிலைபை அறிவியல் துணைகொண்டு எதிர்கொள்ள முயல்வேன்; அவர்களது கோட்பாடுகள் தவறானவை என்று அவர்களுடன் வாதம் செய்து நிரூபிக்க முற்படுவேன்.

ஆனால், தமிழ்நாட்டில் தங்களை நாத்திகர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களில் மிகப்பெரும்பான்மை யினர் உண்மையான நாத்திகர்கள் இல்லை.

Koviloor Digital Library

5-5

இவர்கள் இந்து சமயத்தை மட்டுமே எதிர்ப்பவர்கள். இஸ்லாம், கிறித்துவம், ஜைனம் போன்ற பிற மதங்களை இவர்கள் எதிர்த்துப் பேச மாட்டார்கள்; எழுத மாட்டார்கள்.

கிறித்துவம், இஸ்லாம் போன்ற மதங்களில் நிலவுவதாக எடுத்துக்காட்டப்படும் மூடநம்பிக்கைகளை – அறிவியலுக்குப் பொருந்தாத கட்டுக்கதைகளை – இந்த போலி நாத்திகர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இந்த மதங்களைப் பின்பற்றுவோரிடையே இன்றைக்கும் பரவலாகக் காணப்படும் பெண்ணடிமைக் கொடுமைக்கு எதிராக ஒரு சொல் கூட இந்த போலி நாத்திகர்கள் பேச மாட்டார்கள்.

இந்து சமயத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியை மட்டுமே ஏசுவதும், ஒரு குறிப்பிட்ட மொழியை மட்டும் புறக்கணிப்பதும், ஒரு குறிப்பிட்ட நூலை மட்டும் பழிப்பதும் இந்த போலி நாத்திகர்களின் "கொள்கைகள்". ஆம்; பிராமணர்களை ஏசுவதும், சம்ஸ்கிருதத்தைப் புறக்கணிப்பதும், ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்களைப் பழிப்பதும் இவர்களது செயற்திட்டங்கள்!

இந்தக் "கொள்கைகளுக்காகச்" சமயம் வாய்க்கும் போதெல்லாம் இவர்கள் இந்து சமயத்தைச் சாடுகிறார்கள்.

எனவேதான், இவர்கள் போலி நாத்திகர்கள் என்று அடையாளம் காணப்படுகிறார்கள்.

போலி ஆத்திகர்கள்

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக இந்த போலி நாத்திகர்களுடன், விரல் விட்டு எண்ணக்கூடிய

Koviloor Digital Library

சில போலி ஆத்திகர்கள் கைகோத்துக் கொண்டிருக் கிறார்கள்.

இவர்கள் திருநீறு பூசுவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணாக இவர்கள் செயல்படுகிறார்கள்.

எனவேதான், இவர்கள் போலி ஆத்திகர்கள் என்று இனம் சுட்டப்பெறுகிறார்கள்.

தற்போது இவர்கள் தமிழகத்தில் உள்ள தொன்மையான சைவத் திருமடங்களைத் தாக்கத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாகத் தருமையாதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசித் திருமடம் ஆகியவை இவர்களது பழி தூற்றல்களுக்கு உள்ளாகி யிருக்கின்றன.

தருமபுரம் ஆதீனமும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசித் திருமடமும் தமிழுக்கு எதிரானவையாம்; தமிழ் வழிபாட்டை எதிர்ப்பவையாம்; தமிழில் சமயச் சடங்குகளை நடத்தக்கூடாது என்று கூறுகின்றனவாம்! இவ்வாறு இந்த போலி ஆத்திகர்கள் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்.

இந்த நிலவரம் கண்டு போலி நாத்திகர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். இந்து சமய சைவ நெறி தாக்கப் படுகிறது - சைவத் திருமடங்கள் ஏசப்படுகின்றன - என்ற செய்தி, போலி நாத்திகர்களுக்குக் கரும்பை விட இனிக்கிறது!

போலி ஆத்திகர்களைத் தங்களுக்குச் சாதகமான ஒரு கருவியாக மிகுந்த விருப்பத்துடன் பயன்படுத்து கிறார்கள் போலி நாத்திகர்கள்! போலி நாத்திகர்களின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சிகளும், தினசரி

Koviloor Digital Library

ஏடுகளும், இதர ஊடகங்களும் போலி ஆத்திகர்களுக்கு இடம் தருகின்றன.

ஒரு கூட்டணி

போலி நாத்திகர், போலி ஆத்திகர் ஆகியோரிடையே இவ்வாறு ஒரு **கூட்டணி** உருவாகியிருக்கிறது. சைவ நெறி சிதைந்தால் சந்தோஷப்படக்கூடிய போலி நாத்திகர்களும், சைவ நெறியைக் காப்பாற்றுகிறோம் என்று கூறிக்கொள்ளும் போலி ஆத்திகர்களும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்!

சைவ நெறியை உளமாரப் பின்பற்ற முயலும் ஒரு சைவன் என்ற முறையில் போலி ஆத்திகர் - போலி நாத்திகர் கூட்டணியை எதிர்த்து உண்மையை நிலை நிறுத்துவது எனது கடமை.

உண்மைகளே எனது **ஆயுதங்கள்**; சைவ நூல்களே எனது **ஆதாரங்கள்**; சித்தாந்த சைவ நெறிகளே எனது **துணைகள்.** இவற்றுடன் நான் தொடங்குகின்றேன், சைவ ஆசாரியப் பெருமக்களின் ஆசிகளுடன்.

இறைவன் அருளால் எளியவன் பல நூல்களை எழுதித் தமிழ் மக்களுக்கு வழங்கியிருக்கிறேன். தற்போது இந்தச் சிறு நூலை எழுத வேண்டி உள்ளதே என்று ஓரளவு வருத்தம் உண்டாகிறது. “ஆத்திகத்தில் போலிக் களைகள், அவற்றை அகற்றுங்கள்” என்று ஆத்திகப் பெருமக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய நிலை உருவாகியிருப்பதுதான் வருத்தத்திற்குக் காரணம்.

எனினும், பொய்கள் தாராளமாக உலா வருகின்ற போது, உண்மை உறங்கி விடக்கூடாது என்பதால், அமைதி கொண்டு கடமையை யாற்ற முற்படுகிறேன்.

Koviloor Digital Library

சில உண்மைகள்

ரிக், யஜுர், சாம, அதர்வம் ஆகியவையே நான்கு வேதங்கள்; வேதங்கள் என்று வேறு எவையும் இல்லை — **இது முதலாவது உண்மை.**

வேதங்களை முற்றிலும் ஏற்பது சித்தாந்த சைவம் — **இது இரண்டாவது உண்மை.**

வேதங்களில் மட்டுமே யாகம் என்ற சடங்கைச் செய்வது பற்றிப் பேசப்படுகிறது. ஹிந்து சமயம் நீங்கலாக வேறு எந்த மதத்திலும் யாகம் அல்லது வேள்வி என்ற சடங்கு கிடையாது — **இது மூன்றாவது உண்மை.**

பண்டைய தமிழர்கள் வேத வழியில்தான் யாகங்களைச் செய்தார்கள்; தமிழ் இலக்கியங்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இதனைக் குறிப்பிடுகின்றன — **இது நான்காவது உண்மை.**

தொல்காப்பியம் முதல் பாரதியார் காலம் வரையிலான தமிழ் இலக்கியங்கள் வேதங்களை ஏற்றுப் போற்றி வந்துள்ளன — **இது ஐந்தாவது உண்மை.**

(எனது "வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்" நூலில் பல நூறு எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. "வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்", மூன்றாம் பதிப்பு : 832 பக்கங்கள், விலை ரூ.350/- வெளியிட்டோர் : எல்கேஎம் பப்ளிகேஷன், பழைய எண்.15/4, புதிய எண்.33/4, ராமநாதன் தெரு, தி. நகர், சென்னை - 17. போன் : 24361141)

தமிழகத்தில் தொல்காப்பியம் காலம் முதல் அந்தணர்கள் மட்டுமே யாகங்களைச் செய்யப் பணிக்கப்பட்டார்கள்; வேறு எவரும் வேள்விகளைச் செய்ததில்லை — **இது ஆறாவது உண்மை.**

Koviloor Digital Library

சைவ ஆகமங்கள் இறைவனால் அருளப்பெற்றவை என்பது சைவப்பெருமக்களின் நம்பிக்கை. ஆகமங்களின் வழியே அனைத்தும் நடைபெற வேண்டும் — இதுவே வேதங்களுக்கு இசைவான சைவ நெறி.

(பார்க்க : "ஆலய அர்ச்சனைக்கு ஆகமங்களே அடிப்படை" ஆசிரியர் : கே.சி. லட்சுமிநாராயணன், வெளியிட்டது : எல்கேஎம் பப்ளிகேஷன், பழைய எண்.15/4, புதிய எண்.33/4, ராமநாதன் தெரு, தி. நகர், சென்னை - 17. போன் : 24361141, விலை : ரூ.40/-)

பன்னிரு திருமுறைகள்

பன்னிரு சைவத்திருமுறைகளும் வேதங்களையும் ஆகமங்களையும் முற்றிலும் ஏற்று அமைபவை — **இது மிக முக்கியமான ஏழாவது உண்மை.**

தோத்திரமும், சாத்திரமும் அடங்கிய சைவத் திருமுறைகளை ஆசாரியர்கள் மூலமாக இறைவனே வழங்கி அருளினான் — இது சைவப் பெருமக்களின் உறுதியான நம்பிக்கை.

திருமுறைகளை வழங்கிய ஆசாரியர்கள் அவற்றை ஓதுக - பாடுக - என்றுதான் கட்டளையிட்டிருக்கிறார்கள். திருமுறைகளைச் சடங்குகளுக்குப் பயன்படுத்துமாறு அவர்களில் எவரும் ஆணையிடவில்லை - **இது எட்டாவது உண்மை.**

தமிழகத்தில் சைவ நெறியைப் பரப்பும் திருமடங்கள் தமிழை உரமிட்டு வளர்த்தன; தமிழ் வளர்ச்சிக்கு அவை பெரிதும் உதவின — **இது ஒன்பதாவது உண்மை.**

Koviloor Digital Library

திருமுறைகளைப் பதிப்பித்தும், போற்றியும், பரப்பியும் வருபவை சைவத் திருமடங்களே — **இது பத்தாவது உண்மை.**

இந்த உண்மைகள் அனைத்தையும் இந்தச் சிறு நூலில் ஓரளவு விவரிக்கவிருக்கிறேன்.

நூலகம், கோவிலூர்
A. No. 11571
Q 23

Koviloor Digital Library

திருமுறைகளுக்குத் தடையா?

வேத நூல் சைவ நூல் என்றிரண்டே நூல்கள்;
வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதி நூல் அனாதி அமலன் தரு நூல் இரண்டும்;
ஆரண நூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையின் ஒழி பொருள் வேதாந்தத்
தீதில் பொருள்கொண்டு உரைக்கும் நூல் சைவம் பிற நூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

– சிவஞான சித்தியார்

தொன்மை மிக்க தருமபுரம் ஆதீனமும், திருப்பனந்தாள் காசித்திருமடம் திருக்கோயில்களில் வழிபாட்டில் திருமுறைகளை ஓதுவதற்குத் தடை செய்துள்ளன என்றும், தமிழில் வழிபாடு செய்வதற்கு அவை அனுமதி மறுக்கின்றன என்றும் சமீப காலமாகச் சில வட்டாரங்கள் செய்துவரும் பிரசாரத்தில் எள் முனையளவுகூட உண்மை இல்லை.

தருமையாதீனத்தின் சீடர்கள் நால்வர் தொடுத்துள்ள ஒரு வழக்கில், யாகங்களில் திருமுறைகளை ஓதுவதற்குச் சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. இதுதான் செய்தி.

1. தமிழில் வழிபாடு செய்வதற்கு நீதிமன்றத் தடை இல்லை;

2. வழிபாட்டில் திருமுறைகளை ஓதுவதற்கும் நீதிமன்றத் தடை இல்லை;

3. திருக்கோயில்களிலும், வீடுகளிலும் நிகழக்கூடிய சுப நிகழ்ச்சிகளில் திருமுறைகளைத் தாராளமாகப்

Koviloor Digital Library

பாடலாம். அதற்கும் எந்த விதமான தடையும் கிடையாது.

இதுதான் உண்மை. இதை மறைத்து அல்லது திரித்துத் தருமபுரமும், திருப்பனந்தாளும் ஏதோ தமிழ் மொழிக்கு எதிரானவை என்பது போலப் பிரசாரம் செய்வது, கடவுள் பக்தி உடையவர்களுக்குக் — குறிப்பாகச் சைவப் பெருமக்களுக்கு — வருத்தத்தையும் வேதனையையும் உண்டாக்குகிறது.

திருமுறைகள்

"திரு" என்ற சொல்லுக்குக் கடவுட் தன்மை என்று ஒரு பொருள் உண்டு. "முறை" என்ற சொல் நூல் என்ற பொருளையும் கொண்டது. எனவே திருமுறை என்ற கூட்டுச் சொல்லுக்குத் தெய்வத்தன்மை வாய்ந்த நூல் என்று அர்த்தம் ஆகும்.

பன்னிரண்டு சைவத்திருமுறைகள் உள்ளன. முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் அருளியன. நான்கு, ஐந்து, ஆறாந் திருமுறைகள் திருநாவுக்கரசர் அருளியன. ஏழாந் திருமுறையைச் சுந்தரரும், திருவாசகமும், திருக்கோவையாரும் அடங்கிய எட்டாம் திருமுறையை மாணிக்கவாசகரும் அருளினார்கள்.

ஒன்பது அருளாசிரியர்களின் பாடல்கள் அடங்கிய தொகுப்பு ஒன்பதாம் திருமுறை. திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறை. பன்னிரண்டு அருளாசிரியர்கள் வழங்கிய நூல்களின் தொகுப்பு பதினொராம் திருமுறை. சேக்கிழார் பெருமானின் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை.

Koviloor Digital Library

இந்தப் பன்னிரண்டு திருமுறைகளும் இறைவனால் திருஞானசம்பந்தர் முதலிய அருளாளர்கள் மூலமாக அருளப்பெற்றவை என்பது தருமபுரம் ஆதீனத்தின் நிலை.

இந்தத் திருமுறைகள் அனைத்துக்கும் உரை கண்டது தருமபுரம் ஆதீனம். இது மிகப்பெரிய பணி. விரிவான குறிப்புகள், கல்வெட்டுச் செய்திகள், தெளிவுரைகள், விளக்க உரைகள் முதலியவற்றுடன் பெரும் புலவர் களின் ஈடுபாட்டுடன் கூடிய கடுமையான உழைப்பின் விளைவாக ஒவ்வொரு திருமுறையின் மூலமும், உரையும் வெளியிடப்பட்டன.

உரைப்பதிப்புகள்

"இவற்றுக்கு (திருமுறைகளுக்கு)ப் பொருள் காணுதல் மிகுந்த சிரமமான காரியம். தேவாரங்களைப் பொருளுடன் வெளியிடுதல் இதுவரை எவரும் செய்யாத வேலை. தருமபுர ஆதீனத்தில் இதனை மேற்கொண்டது சைவ உலகத்திற்கும், தமிழ் உலகத்திற்கும் **பேருபகாரமான காரியம்.** திருமுறைகளுக்குப் பொருள் காணுதல் எளிதன்று" என்று பெரியபுராணப் பேருரையாசிரியர் சி.கே. சுப்பிரமணிய முதலியார் (சம்பந்த சரணாலயர்) ஒரு திருமுறை உரைக்கு எழுதிய அணிந்துரையில் வியந்து குறிப்பிட்டிருக்கிறார்.

திருமுறைகள் இறைவனின் திருவாக்கு. அவற்றை எளிய மக்களும் அறிந்து உணர்ந்து போற்றுவதற்கு - இறைவனை வழிபடுவதற்கு - ஒரு பெரிய உதவியைத் தருமபுர ஆதீனம் திருமுறை உரைப்பதிப்புகளை வெளியிட்டதன் மூலம் செய்திருக்கிறது.

Koviloor Digital Library

இந்தப் பேருதவியைப் புரிந்துள்ள தருமபுர ஆதீனத்தைத் திருமுறைகளுக்கு எதிரானது என்று கூறுவது எவ்வளவு கொடுமையான பிழை!

இன்னொன்றைக் குறிப்பிட வேண்டும். தருமபுரத்தின் திருமுறை உரைப் பதிப்புகள் மிகவும் குறைந்த விலைகளில் விநியோகிக்கப்படுகின்றன. சாமானிய மக்கள் வாங்கிப் பயனடைகிறார்கள்.

இந்த உரைப் பதிப்புகள் தமிழகத்தில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள தமிழறிந்த பெருமக்கள் புனிதம் மிக்க திருமுறைகள் குறித்து மிகத் தெளிவாக அறிந்து கொள்ள வகை செய்கின்றன.

இந்த வாய்ப்பு, தமிழ்நாட்டுத் தொன்மையான சைவ ஆதீனங்களில் குறிக்கத்தக்க சிறப்பு வாய்ந்த தருமையாதீனம் அளித்துள்ள கொடை.

சாத்திர நூல்கள்

பன்னிரு திருமுறைகளும் **தோத்திர நூல்கள்** என்று சைவர்களால் போற்றப்படுகின்றன.

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பற்றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய பதினான்கு நூல்கள் தமிழ் மொழியில் **சைவ சித்தாந்த சாத்திர நூல்களாக** விளங்குகின்றன.

மெய்கண்டார் அருளியது சிவஞான போதம். இது சாத்திர நூல்களுள் அடிப்படையானது. மேலே

Koviloor Digital Library

குறிப்பிட்டுள்ள பதினான்கு நூல்களும் மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் வழங்கப்படுகின்றன.

பன்னிரண்டு திருமுறைகளும், பதினான்கு சாத்திர நூல்களும் ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்களையும், சிவாகமங்களையும் முழுமையாக ஏற்பவை. இது ஒரு முக்கியமான செய்தி.

வேத, ஆகமங்களை இறைவனே அருளினான் என்பது சைவ சித்தாந்திகளின் கொள்கை. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ **சமய ஆசாரியர்களும்**, மெய்கண்டார், அருள் நந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய **சந்தான ஆசாரியர்களும்** வேத, ஆகம நெறிகளை ஏற்றுக்கொண்டு, வலிமைப்படுத்தி நிலைநிறுத்தியவர்கள்.

வேதங்களை ஏற்று அமைவது சைவ சமயம்.

வேதங்களின் விரிவு ஆகமங்கள். அவற்றையும் இறைவனே வழங்கினான் என்பது சைவ நெறியாளர் களின் நம்பிக்கை. திருக்கோயில்களை அமைத்தல், அவற்றில் இறைவனது ஒப்பற்ற சக்தியைப் பதித்தல், சடங்குகள் செய்தல், விழா எடுத்தல் முதலியவை குறித்த அனைத்து விதிமுறைகளும் ஆகமங்களில் இருக்கின்றன.

வேதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றுக்கு இணக்க மாகத் திருக்கோயில்களில் வழிபாடும், தனி மனிதர் வாழ்வியல் சமயச் சடங்குகளும் அமையுமாறு முறை செய்வது திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய சைவ ஆதீனங்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

சம்ஸ்கிருத மொழி

கடந்த சில ஆண்டுகளாகச் சைவ ஆதீனங்களின் **வழிகாட்டுதலுக்கு மாறாகக்** கும்பாபிஷேகம் செய்தல்,

Koviloor Digital Library

யாகம் புரிதல், திருமணம் நடத்தி வைத்தல் முதலியவை நடைபெற்று வருகின்றன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற சமய ஆசாரியர்களும், மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியர் போன்ற சந்தான ஆசாரியர்களும் காட்டியுள்ள மார்க்கங்கள், மரபுகள் ஆகியவற்றை மீறாதீர் என்று மட்டுமே சைவ ஆதீனங்கள் எச்சரிக்கின்றன.

சம்ஸ்கிருதம், தமிழ் இரண்டும் இறைவனுக்கு உகந்தவை என்று தோத்திர நூல்களும், சாத்திர நூல்களும் புகல்கின்றன. எனவே, சம்ஸ்கிருத மொழி கூடாது என்று ஒதுக்காதீர் என்று தருமையாதீனம் கூறுகிறது.

அதன் தலைமைச் சீட அமைப்பான திருப்பனந் தாள் காசித்திருமடமும் இதனை வலியுறுத்துகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள திருவுந்தியார் முதலிய பதினான்கு சாத்திர நூல்களை (மெய்கண்ட சாத்திரங் களை) ஆராய்ச்சி முன்னுரை, விளக்கவுரை, தெளிவுரை, நுண்பொருள் விளக்கம் முதலியவற்றுடன் கயிலை மாமுனிவர் திருவளர்திரு காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அருளாணை யின் வண்ணம் திருப்பனந்தாள் காசித் திருமடம் வெளியிட்டிருக்கிறது.

மெய்கண்ட சாத்திரங்களின் முழுமையான பொருளை எளிய மக்களும் அறிந்து அருள் நலம் பெறுவதற்கு இந்தப் பதிப்புகள் வகை செய்கின்றன. **இவை தமிழருக்குக் கிடைத்துள்ள மற்றொரு அரிய கொடை.**

இந்தச் சாத்திர நூல்கள் சம்ஸ்கிருத மொழியை வெறுக்காதீர் என்று போதிக்கின்றன.

Koviloor Digital Library

சம்பந்தப்பெருமான் முதலிய சமய ஆசாரியர்களையும், மெய்கண்டார் முதலிய சந்தான ஆசாரியர்களையும் ஏற்கும் சைவர் எவரும் சம்ஸ்கிருத மொழியைத் துவேஷிக்க மாட்டார்கள். வழிபாட்டில் அவசியமான இடங்களில் அதைப் பயன்படுத்துவார்கள்.

வேதங்களும், ஆகமங்களும் உள்ள சம்ஸ்கிருத மொழி எவருக்கும் தாய்மொழி இல்லை. அது பொது மொழி.

தாய்மொழி, மாநிலமொழி, தேசிய மொழி என்ற எல்லைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட உலகச் செம்மொழி சம்ஸ்கிருதம்.

சம்ஸ்கிருதம் பிராமணர்களின் தாய்மொழி என்று கருதுவது முற்றிலும் தவறு. தமிழ்நாட்டில் உள்ள பிராமணர்களுக்குத் தாய்மொழி தமிழ்; ஆந்திரத்தில் தெலுங்கு; கர்நாடகத்தில் கன்னடம்; வங்காளத்தில் வங்க மொழி. இவ்வாறு இந்தியாவில் எங்கும் பிராமணர்களுக்குத் தாய்மொழியாக சம்ஸ்கிருதம் இல்லை.

மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். சம்ஸ்கிருத மொழியைச் செம்மொழி என்று பல ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசு அறிவித்து அதற்கு எல்லா வகையான ஊக்கமும் ஊட்டமும் அளித்து வருகிறது. அதைப் பேச்சு மொழி ஆக்கவும் இந்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

எனவே சம்ஸ்கிருத மொழி கூடாது என்ற துவேஷத்துடன் அல்லது குறுகிய நோக்குடன் கூறுவது சரியன்று. வேதங்கள், ஆகமங்கள் உள்ள சம்ஸ்கிருத மொழியை ஏற்பவர்களே சைவர்களாக விளங்க முடியும் என்பதுதான் சித்தாந்த சைவத்தின் நிலை.

Koviloor Digital Library

யாகங்கள்

திருமுறைகள் பாராயண நூல்கள்; திருமுறைப் பாடல்கள் தோத்திரப் பாடல்கள். அவற்றை ஓத வேண்டும் என்பதும், ஓதுவித்துக் கேட்க வேண்டும் என்பதும் சைவ சமய ஆசாரியர்கள் வகுத்த நெறி.

திருமுறைகளைப் பக்தியுடன் ஓதினால் எல்லா நலங்களையும் நிச்சயமாகப் பெறமுடியும். சம்பந்தரும், அப்பரும் இதனை நிரூபித்திருக்கிறார்கள். திருமுறை எலும்பைப் பெண்ணாக்கும் வல்லமை பெற்றது; விஷக்கடி வினையை அகற்றக்கூடியது. கொடிய வெப்ப நோயைத் தீர்க்க வல்லது.

அற்புதங்களைச் செய்துகாட்ட வல்ல திருமுறைகளைக் கும்பாபிஷேகம், யாகம் போன்ற சடங்குகளுக்குப் பயன் படுத்துவது தவறு.

யாகம், வேதங்களில் மட்டுமே சொல்லப்படுவது. வேறு எந்த மதத்திலும் யாகம் செய்வது பற்றிய குறிப்பு எதுவும் கிடையாது.

பண்டைய தமிழர் வேதங்களை ஏற்று, அவற்றின் அடிப்படையில் யாகங்களைச் செய்தார்கள் என்பது வரலாறு. வேத வழியில்தான் யாகங்கள் தமிழகத்தில் நடைபெற்றன என்பதைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும், சங்கம் மருவிய கால நூல்களும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

வேதங்களில் சொல்லப்பட்டுள்ள வண்ணமே யாகம் நடத்தப்பெற வேண்டும். இதுவே சைவ ஆதீனங்களின் நிலை.

“திருமுறைகளைக் கொண்டு யாகம் செய்யுங்கள், கும்பாபிஷேகம் செய்யுங்கள்” என்று திருமுறைகள்

Koviloor Digital Library

அருளிய எவரும் கூறவில்லை. இது குறிப்பிட வேண்டிய முக்கியமான ஒரு செய்தி.

வேதங்களின் வழி யாகம் செய்க என்பதே திருமுறைகளை அருளிய அருளாளர்களின் கட்டளை. அவர்களது திருமுறைகளே இதற்குச் சாட்சியாக அமையும் ஆவணங்கள்.

திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் முதலியன ஆகமங்களின் வழியிலேயே நடைபெறவேண்டும்.

தமிழில் செய்யலாம்

தமிழில்தான் யாகம் செய்வோம் என்று கூறுபவர்களை வேண்டாம் என்று தருமபுரமும், திருப்பனந்தாளும் தடுக்கவில்லை. **இது மிக முக்கியமான மற்றொரு செய்தி.**

"திருமுறைப் பதிகங்களைக் கூறி யாகம் செய்யக் கூடாது. ஏனென்றால் திருமுறைகள் ஓதுவதற்கு மட்டுமே உரியவை. தமிழில் யாகம் செய்ய விரும்புபவர்கள், தமிழில் அர்ச்சனை நூல்கள் புதிதாக உருவாக்கப் பட்டிருப்பதைப் போல, யாகத்திற்கும் தமிழில் புதிதாகச் சொற்களை உருவாக்கிக் கொண்டு, யாகம் செய்யலாம்" என்று தருமபுரம் ஆதீனத்தின் தலைமைச் சீடரை அதிபராகக் கொண்ட திருப்பனந்தாள் காசித்திருமடம் அறிவித்திருக்கிறது.

எனவே, தமிழில் யாகம் செய்வதைத் தருமபுரமும், திருப்பனந்தாளும் **எதிர்க்கவில்லை** என்பது தெளிவு.

இறைவனுக்குச் சம்ஸ்கிருத மொழியில் அர்ச்சனை செய்வதை விரும்பாதவர்கள், தமிழில் அர்ச்சனை நூல்களைத் தயாரித்து உபயோகிக்கிறார்கள்.

Koviloor Digital Library

அதேபோல, யாகம் செய்வதற்காகத் தமிழில் புதிதாகச் சொற்களை உருவாக்கிக் கொள்ளட்டும்; அதற்கு ஆட்சேபம் இல்லை; புனிதம் மிக்கவையும், ஓதுவதன் மூலமாக இறைவனது திருச்செவியை அடையும் ஆற்றல் படைத்தவையுமான திருமுறைகளை யாகத்திற்கு உபயோகிப்பதற்குத்தான் ஆட்சேபம்.

''கற்றுணை பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று சொல்லிவிட்டு, யாக நெருப்பிலே போடுவது கூடாது என்றுதான் சைவத் திருமடங்கள் சொல்கின்றன.

"ஓங்காரமே நல் திருவாசி உற்று அதனில் நீங்கா எழுத்தே நிறைசுடராம்'' என்று கூறிவிட்டு யாக நெருப்பிலே போடுவது தவறு என்றுதான் அவை சுட்டிக்காட்டுகின்றன.

திருமுறைப்பாடல்களைக் கூறி அக்னியில் போடாதீர் என்றுதான் அவை தெரிவிக்கின்றன.

குருவை நிந்திக்கலாமா?

இறைவனை அடைவதற்குச் சரியான வழியைக் காட்டுபவர் குரு. அவர் கடவுளுக்குச் சமானமானவர் என்று திருமூலரின் திருமந்திரம் சுட்டிக்காட்டுகிறது. தருமபுரம் ஆதீன குருமகா சந்நிதானம், திருவாவடுதுறை ஆதீன குரு மகாசந்நிதானம் போன்றவர்கள் சைவர்களுக்கு நல்ல வழிகாட்டுபவர்கள்.

அவர்களை அவமதிப்பதும், நிந்தனை செய்வதும் சரியன்று. சைவ நெறியில் ஆசாரியப் பெருமக்களுக்கு மிக உயர்ந்த இடம் அளிக்கப்பட்டுள்ளதைத் திருமுறைகள் திரும்பத்திரும்ப எடுத்துக் காட்டுகின்றன.

Koviloor Digital Library

சிறந்த குருவை அவமதிக்காதீர்கள் என்பதே வேண்டுகோள்.

பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், ரா.பி. சேதுப்பிள்ளை, திரு.வி.க., கி.வா. ஜகந்நாதன், அ.ச. ஞானசம்பந்தன் போன்ற பல அறிஞர்கள் தருமபுர ஆதீனத்தின் சைவத் தொண்டு, தமிழ்த்தொண்டு, சமுதாயத்தொண்டு ஆகியவற்றை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

மதுரை ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது வெளியிடப்பட்ட **"தமிழ் வளர்க்கும் தருமபுரம்"** என்ற நூல் தருமையாதீனத்தின் தமிழ்ப் பணியை ஒருவாறு எடுத்துரைக்கிறது.

"தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்" தருமபுர ஆதீனத்தின் பெரும் பணிகளைப் பட்டியலிட்டுப் போற்றுகிறது.

நாத்திகர் உறவு

தருமபுரம், திருப்பனந்தாள் ஆகியவற்றைச் சாட முனைந்துள்ளவர்களுடன் சமய நம்பிக்கையற்ற சில அமைப்புகள் கைகோத்துள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும்.

கடவுள் பக்தி இல்லாத கட்சிகளும், குழுக்களும் தருமபுரம், திருப்பனந்தாள் ஆகியவற்றின் மீது பாய்வதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், தங்களை ஆத்திகர்கள் என்றும், சைவத்திருமுறைகளைத் தாங்கள் நேசிப்பவர்கள் என்றும் கூறிக் கொள்ளு பவர்கள் நாத்திகர்களுடன் ஒரே மேடையில் அமர்ந்து சைவத் திருமடங்களை எதிர்ப்பதைக் காண்கின்றபோது, இவர்களது சுய வடிவம் அம்பலமாகிறது.

Koviloor Digital Library

இவர்கள் திருநீறு பூசும் போலி ஆத்திகர்கள் என்பது தெரிகிறது.

கடவுள் நம்பிக்கை உடையவர்கள் — குறிப்பாகச் சைவ நெறியைப் பேணுபவர்கள் — இந்த போலி ஆத்திகர்களை எச்சரிக்கை உணர்வுடன் ஒதுக்க வேண்டும்.

தருமபுரமும், திருப்பனந்தாளும் ஒரு பிழையும் செய்யவில்லை என்பதையும், மக்களுக்கு அவை நல்ல இறைமார்க்கத்தையே காட்டுகின்றன என்பதையும் மக்கள் உணர்ந்து தெளிந்து, சைவத்திருமுறைகளின் ஒப்பற்ற பெருமையைப் பேணிக்காக்க வேண்டும்.

வான்முகில் வழாதுபெய்க; மலி வளஞ்சுரக்க; மன்னன்
கோன்முறை யரசு செய்க; குறைவிலாது உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

— கந்தபுராணம்

Koviloor Digital Library

அனைத்துப் பத்திரிகைகளும், ஆன்றோரும், சான்றோரும்
பெரிதும் பாராட்டிய

வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்

ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்களைத் தமிழ்நாடு நீண்ட நெடுங்காலமாக ஏற்றுப் பின்பற்றி வந்துள்ளதை விவரிக்கும் அரிய நூலின் மூன்றாம் பதிப்பு தற்போது வெளிவந்துள்ளது.

ஆசிரியர் : திரு. கே.சி. லட்சுமிநாராயணன்
(மூத்த பத்திரிகையாளர்)

இந்த ஈடு இணையற்ற நூல் குறித்து பத்திரிகைகள், சமயத் தலைவர்கள், சான்றோர்களின் மதிப்புரைகளில் சில—

- ❖ பல நூல்களின் சாரம் ஒரே நூலில் கிடைப்பது அரிது. எனவே, இது அரிய நூல். **— தினத்தந்தி**
- ❖ This book is an extensively researched work covering a very wide range of scriptural texts, seers and religious institutions, quotes from which show material establishing the inter-relation between the Vedic tenets and Tamil classics. One is reminded of the real meaning of the term 'Ubhaya Vedantha', which aptly fits the author regarding his scholarship in Sanskrit and Tamil, in the area of philosophy.... **- THE HINDU**
- ❖ வார்த்தைகள்மேல் மோகம் கொண்ட எனக்கு, 'ஓத்து' என்ற சொல் பற்றிய விவரங்கள், லட்சுமி நாராயணனின் ஆராய்ச்சித் திறமையை அறிவிக்கின்றன. **— ஆனந்த விகடன், 'கற்றதும் கேட்டதும்' பகுதியில் திரு. சுஜாதா.**
- ❖ லட்சுமிநாராயணனின் படைப்புச் சூரியனுக்கு முன், ஏற்கெனவே ஒளி இழக்க ஆரம்பித்துவிட்ட மத்தாப்புக்கள் இனியும் எடுபடாது என்பது உண்மை. **— தமிழன் எக்ஸ்பிரஸ்**
- ❖ பாராட்டுதலுக்கு உரிய அற்புத முயற்சி இது. வேதங்கள் என்றால் ஏதோ ஹிந்துக்களின் மத நூல் மட்டுமே என்ற தவறான கருத்தை அடியோடு மாற்றி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், வானியல் போன்ற ஏராளமான அரிய விஷயங்கள் வேதங்களில் உள்ளதை ஆணித்தரமாக விளக்கும் இந்த அரிய நூலை, முக்கியமாக இளைஞர்களும் பெண்களும் படித்து, வேதங்களின் உயர்வை அறிந்துகொள்ளுவது அவசியம்." **— குமுதம் ஜோதிடம்**

Koviloor Digital Library
A. No. 1157
Q23

உடனடியாகப் படிப்பீர்! உண்மை அறிவீர்! உறுபயன் பெறுவீர்!

- கோயில்களில் எல்லோரும் அர்ச்சகர்கள் ஆக முடியுமா?
- ஆகமங்கள் என்ன கூறுகின்றன?
- ஆகம விதிகளை மீறுவது சரியா?
- தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பெரிய புராணம் முதலிய பன்னிரு சைவத் திருமுறைகள் என்ன சொல்கின்றன?
- சைவ சித்தாந்தத்தின் விளக்க நூல்களான பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களின் கருத்து என்ன?
- தொன்மையும், கீர்த்தியும் மிக்க தருமபுர ஆதீனத்தின் அறிவுரை என்ன?
- அருணகிரிநாதர், தாயுமான சுவாமிகள், கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆகிய அருளாளர்கள் என்ன சொல்கிறார்கள்?

இந்தக் கேள்விகள் அனைத்துக்கும் விடைகளைத் தரும் ஆய்வு நூல்:

ஆலய அர்ச்சனைக்கு ஆகமங்களே அடிப்படை

ஆசிரியர்:

ஆராய்ச்சித்திறனும் ஆழமான புலமையும் மிக்க

கே.சி. லட்சுமிநாராயணன்

(மூத்த பத்திரிகையாளர்)

விலை : ரூ.40/-

கோயில் கட்ட நிலத்தைத் தேர்ந்தெடுப்பது, கோயிலைக் கட்ட வேண்டிய முறை, தெய்வங்களை பிரதிஷ்டை செய்யும் விதம், பூஜைகளுக்கான விதி முறைகள், அபிஷேகத் திரவியங்கள், பூஜைக்கு ஏற்ற பூக்கள், திருவிளக்கின் சிறப்பு, மாத விசேஷ பூஜைகள், பதினெட்டுக் கிரியைகள், உற்சவங்கள், கும்பாபிஷேகம் முதலிய எல்லாக் காரியங்களுக்கும் ஆகம விதிகள் தெளிவாக இருப்பதை எடுத்துக்காட்டும் நூல்.

பிள்ளையார்பட்டி சிவத்திரு. பிச்சை சிவாசாரியர் அவர்களின் கருத்து விளக்கமும் தரப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

Koviloor Digital Library

நூலாசிரியரின் பிற நூல்கள்

- வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள் (சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தின் பரிசு பெற்றது) ரூ.350/-
- அறுபத்து மூவர் : வரலாறும் செய்திகளும் ரூ.120/-
- சுக்கிர நீதி ரூ.290/-
- தமிழக அந்தணர் வரலாறு (இரு தொகுதிகள்) ரூ.400/-
- சிந்தனைகள் ரூ.150/-
- ஆலய அர்ச்சனைக்கு ஆகமங்களே அடிப்படை (சைவ ஆதீனங்களின் பாராட்டுப் பெற்ற நூல்) ரூ.40/-
- காசி யாத்திரை செய்வது எவ்வாறு? ரூ.40/-
- வடார்க்காடு சம்பிரதாயங்கள் ரூ.40/-
- தினமணி ஆசிரியர் ஏ.என். சிவராமன் ஏற்று வளர்த்த பத்திரிகை தர்மம் ரூ.200/-
- ஆனந்த வாழ்வுக்கு ஆசாரக்கோவை ரூ.60/-